DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 118/2014

PROSECUTION WITNESS No - PW- 2

| | | | |
|---|---|---|---|
| Name : | தாழையம்மாள் | Caste: | |
| Husband name | ஜெகசுப்ரமணியன் (எ) பழனி | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of February 2026.

6 வது மற்றும் 9 வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2 வது மற்றும் 4 வது எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்து காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்கள்.

**<u>முதல் விசாரணை :</u>**

எனக்கு சொந்த ஊர் ஒய்யவந்தான் கிராமம் ஆகும். எனது கணவர் பெயர் ஜெகசுப்பிரமணியன் (எ) பழனி ஆகும். இவ்வழக்கில் இறந்த நபர் என் கணவர் தான். இந்த வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். குறிப்பாக இவ்வழக்கின் எதிரிகள் பன்னீர் செல்வம், காளீஸ்வரன், மணி மற்றும் அய்யப்பன், பச்சைப்பிள்ளை ஆகிய எதிரிகள் அனைவரையும் எனக்கு நன்கு தெரியும். கடந்த 13.06.2000 அன்று காலை 07.00 மணியளவில் எனது கணவர் எனது பெண் வயதிற்கு வந்ததால் சமான்கள் வாங்குவதற்காக சிவகங்கைக்கு சென்றார். அவர் போகும்போது நான் பகல் 01.30 மணிக்கு வந்துவிடுவேன் எனவே எனது அப்பாவையும் என் கணவருக்கு எனக்கு உடல்நிலைய சரியில்லாததால் என் தங்கயைான சீதாவை 2 ம் தாராமாக திருமணம் செய்து வைத்திருந்த நிலையில் அவரையும் பேருந்து நிறுத்தத்திற்கு அனுப்பி வைக்குமாறு சொன்னார். அதன் பின் என் கணவர் சிவகங்கை சென்ற நிலையில் அன்று பகல் 01.30 மணியளவில் என் தங்கை சீதாவும் என் அப்பா காங்கேயவேலு (தற்போது உயிருடன் இல்லை ) என்பவரையும் நான் பேருந்து நிறுத்தத்திற்கு அனுப்பி வைத்தேன். அப்போது சிறிது நேரத்தில் கண்மாய்க்குள்

ஒரே சத்தமாக கேட்பதாக என் சித்தப்பா குருபாதம் என்பவரும் என் மாமா மயில்வாகனம் என்பவரும் என்னிடம் சொன்னார்கள். உடனே நாங்கள் மூன்று பேரும் சத்தம் கேட்ட கண்மாய்க்குள் ஓடி வந்தோம். நாங்கள் உள்ளே சென்று பார்த்த போது என் கணவர் பழனி என்பவர் தலை, கழுத்து, முதுகு, இடதுபுற தோள்பட்டை, கால்தொடை, இடது உள்புற கையில் வெட்டு, இரண்டு முழங்கையில் வெட்டு ஆகிய காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அதேபோல் அந்த இடத்திற்கு சற்று தள்ளி எனது சித்தப்பா மகன் சுதாகரன் என்பவர் தலை, முதுகு, விலா, தொடை, ஆகிய பகுதிகளில் வெட்டு காயங்களுடன் கிடந்தார். அப்போது இவ்வழக்கின் எதிரிகளான பன்னீர்செல்வம் (தற்போது உயிருடன் இல்லை), பன்னீர்செல்வம் மகன் காளீஸ்வரன், ஐயப்பன், முத்து, ராமு, மணி, ஸ்டாலின் ஆகியோர்கள் சென்றதை பார்த்தேன். அவர்கள் ஒரு டிராக்டர் வண்டியில் ஏறிச்சென்று விட்டார்கள். அதன் பின் இவ்வழக்கில் 1வது சாட்சியான எனது தந்தை காங்கேயவேலு காளையார்கோவில் காவல் நிலையம் சென்று இவ்வழக்கு தொடர்பாக புகார் மனு கொடுத்தார். பன்னீர்செல்வம் பஞ்சாயத்து தலைவராக இருந்து பணம் மோசடி செய்ததால் அவரை பதவி நீக்கம் செய்துவிட்டார்கள். அதன் பின் பன்னீர் செல்வம் செங்கல் காளவாசல் வைத்து சமுதாய கிணற்று தண்ணீரை காளவாசலுக்கு பயன்படுத்தியதால் எனது கணவர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்து பஞ்சாயத்து கூட்டத்தில் புகார் கொடுத்தது தொடர்பாக இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது நீ தான் அனைத்திற்கு காரணம் இன்னும் 10 நாளில் உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று இறந்து போன பன்னீர்செல்வம் சொல்லிவிட்டு சென்றதாகவும் அதனால் தான் என் கணவரை கொன்றுவிட்டதாக நான் போலிஸ் விசாரணையில் சொன்னேன். இந்த விவரங்களை தான் நான் போலிஸ் விசாரணையில் சொன்னேன். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இந்த பிரித்தெடுக்கப்பட்ட வழக்கு சம்பந்தப்பட்ட மூல அமர்வு வழக்கு எண்.5/2005 ல் மற்ற எதிரிகள் சம்பந்தமாக ஏற்கனவே நான் சாட்சி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே நான் சாட்சியம் அளித்த போது இந்த எதிரிகளின் பெயர்களையோ அல்லது மற்ற எதிரிகளின் பெயர்களையோ நான் குறிப்பிட்டுக்கூறி சாட்சியம் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. நான் தற்போது முதல் விசாரணையில் சொல்லியது போல் எனது கணவர் சிவகங்கைக்கு சென்றுவிட்டு பகல் 01.30 மணிக்கு திரும்பி வருவதாக சொல்லிவிட்டு அப்போது என் அப்பாவையும் என் தங்கையான சாட்சி சீதாவையும் பேருந்து நிறுத்தத்திற்கு வரச்சொல்லி விட்டு சென்றார் என்ற விவரத்தையோ சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. கண்மாய்குள் சத்தம் கேட்பதாக குருபாதம், மயில்வாகனம் ஆகியோர் என்னிடம் சொன்னபோது நான் எங்கு இருந்தேன் என்றால் எங்கள் ஊரில் உள்ள எங்கள் வீட்டில் இருந்தேன். அப்போது எனது தங்கையும் எனது வீட்டில் தான் இருந்தாரா என்றால் அவர் எங்கள் வீட்டில் இல்லை. சம்பவ இடம் எங்கள் வீட்டிலிருந்து 2, 3 கிமீ தூரம் இருக்குமா என்றால் 200 அடிக்குள்தான் இருக்கும். ஏற்கனவே மூல அமர்வு வழக்கு எண்.5/2005 ல் என்னை சாட்சியாக விசாரித்தபோது கண்மாய்க்குள் ஒரே சத்தமாக கேட்டதாக குருபாதம், மயில்வாகனம் ஆகியோர் என்னிடம் வந்து சொன்னதாக நான் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞபாகமில்லை. அப்படி சொன்னவுடன் நானும் என் தங்கை அ.சா.1 சீதாவும் என் சித்தப்பா மகன் சுதாகரும் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்று சாட்சியமளித்திருக்கிறேனா என்றால் ஞபாகமில்லை. அவ்வாறு நான் வழக்கில் ஏற்கனவே சாட்சியம் சொல்லிவிட்டு தற்போது அதை மறைத்து மேற்படி எதுவும் ஞபாகமில்லை என்று பொய்யாக சொல்லிகிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் வெட்டுப்பட்டு கிடந்த இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் டிராக்டர் நின்றது என்றால் சுமார் 100

அடி தூரத்தில் இருந்தது. நான் ஏற்கனவே சொன்ன சாட்சியத்தில் எதிரிகள் எல்லோரும் டிராக்டரில் ஏறிச்சென்றதை நான் பார்த்தேன் என்ற விவரத்தை நான் சொல்லியிருக்கிறேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. டிராக்டர் எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி டிராக்டர் யார் ஓட்டிச்சென்றார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. மேற்படி டிராக்டரை எங்கள் ஊரிலுள்ளவர்கள் விரட்டிச்சென்றார்களா என்றால் நான் அதை கவனிக்கவில்லை. நான் சம்பவ இடமான கண்மாய்க்கு சென்றபோது எத்தனை பேர்கள் அங்கு இருந்தார்கள் என்றால் ஆட்கள் இருந்தார்கள் ஆனால் எத்தனை பேர்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. எனது கணவர் வெட்டுப்பட்டு கிடந்த இடத்திற்கு சென்று அவரை தூக்கி எதாவது செய்தேனா என்றால் நான் அவர் மீது விழுந்து அழுதேன். அப்படி அவர் மீது விழுந்து நான் அழுத போது எனதுமேலிலும் எனது உடைகளிலும் எதாவது இரத்தம்பட்டதா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. அதேபோல் என்னுடைய உடைகளை போலிசார் கேட்டு வாங்கி கொண்டார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனது கணவர் கண்மாய்குள் வெட்டுப்பட்டு இருக்கும்போது போலிசார் எவ்வளவு மணிநேரத்தில் வந்தார்கள் என்றால் என் அப்பா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்த பின்பு போலிசார் வந்தார்கள். எப்போது வந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் சம்பவ இடத்தில் எனது கணவரின் பிரேதத்துடன் இருக்கும் போதே போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி போலிசார் வந்தவுடன் சம்பவ இடத்தில் வைத்து என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் வாக்குமூலம் வாங்கினார்கள். எனக்கு இருதய அறுவை சிகிச்சை செய்து இருப்பதால் கடந்த 20 ஆண்டுகளாக நான் வீட்டைவிட்டு வெளியே எங்கும் செல்வதில்லை என்றால் நான் துணை நபர்களுடன் செல்வேன். மூல அமர்வு வழக்கு எண்.5/2005 ல் என்னை சாட்சியாக விசாரித்தபோது ஊரில் பன்னீர்செல்வம் மீது பஞ்சாயத்து நடந்ததாகவும் அப்போது 10 நாளில் என் கணவரை வெட்டாமல் விடமாட்டேன்

என பன்னீர்செல்வம் சொன்னதையோ நான் மூல அமர்வு வழக்கு எண்.5/2005 ல் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் ஞாகபமில்லை. மேலும் எனது கணவர் பழனி, பன்னீர்செல்வம் மீது மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தார் என்ற விவரத்தை மூல அமர்வு வழக்கு எண்.5/2005 ல் சாட்சியம் சொன்னேனா என்றால் எனக்கு ஞபாகமில்லை. அதேபோல் எங்கள் ஊர் சமுதாய கிணற்றில் உள்ள தண்ணீரை தனது செங்கல்காளவாசலுக்கு பன்னீர்செல்வம் எடுத்தார் என்று ஏற்கனவே நான் சாட்சியம் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாகபமில்லை. நான் தற்போது முதல் விசாரணையில் சொல்லியது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் நான் கண்மாய்கரைக்கே போகவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஏற்கனவே அசல் மூல அமர்வு வழக்கு எண்.5/2005 ல் சொன்ன சாட்சியத்திற்கு விரோதமாக அந்த சாட்சியம் எனக்கு நினைவில் இருந்தும் அதை வேண்டும் என்றே மறைத்து ஞாபகமில்லை என்றும் தவறான ஒரு பொய் சாட்சியத்தை நான் இந்த நீதிமன்றத்தில் தற்போது கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.02.23 15:24:48 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை